அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

சுபீட்சம்

SUPEEDSAM

EVERYTHING FOR PEOPLE

# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

நாள் தோறும் சுபீட்சம் மின்னிதழை பார்வையிட www.supeedsam.com

செவ்வாய்க்கிழமை 17.01.2023 supeedsam.com supeedsam@gmail.com


# ஜனாதிபதியுடனான கலந்துரையாடலில் நம்பிக்கை இல்லை

## நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன்



யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற ஜனாதிபதியுடனான கலந்துரையாடலில் நம்பிக்கை இல்லை என நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் இன்றையதினம் உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான கட்டுப்பணத்தை செலுத்திய பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கே எம்.ஏ.சுமந்திரன் இவ்வாறு பதில் வழங்கினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், எந்த காலப்பகுதிக்குள் காணிகள் விடுவிக்கப்படும் என சொல்லவில்லை, 108 ஏக்கர்

02 ஆம் பக்கத்தில்...

## உள்ளூராட்சி சபைத் தேர்தல் பிற்போடப்படாது

### மஹிந்த அமரவீர



உள்ளூராட்சி சபைத் தேர்தல் பிற்போடப்பட மாட்டாது என விவசாய மற்றும் வனஜீவராசிகள் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் இந்த விடயத்தினைக் குறிப்பிட்டுள்ளார்.

தனக்கு தெரிந்தவரை தேர்தலை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

வாக்கெடுப்பு ஒத்திவைக்கப்படாது என கூற விரும்புவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் நிலை குறித்து வருந்துவதாகவும் அவர் கூறியுள்ளார்.

அவருடன் தங்களுக்கு எந்த தனிப்பட்ட பிரச்சனையும் இல்லை எனவும் விவசாய மற்றும் வனஜீவராசிகள் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

## முதுகெலும்புள்ள தலைவர் எமக்கு இல்லை

### காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள்



உலகமே தமிழர்களின் பின்னால் நிற்கிறது, ஆனால் முதுகெலும்புள்ள தலைவர் எமக்கு இல்லை என காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தெரிவித்துள்ளனர்.

காணாமல் ஆக்கப்பட்ட தமிழ் குழந்தைகளை கண்டறியவும் எதிர்கால இனப்படுகொலையில் இருந்து தமிழர்களை காக்க கோரியும் வவுனியா பிரதான தபாலகத்திற்கு அருகாமையில் தொடர்ச்சியான போராட்டத்தின் 2156 நாளாக போராடி வரும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளே இவ்வாறு தெரிவித்தனர்.

பண்டைய தமிழ் இறையாண்மை பொங்கல் வேண்டும் வேண்டும் என தெரிவித்து நேற்று (ஞாயிற்றுக்கிழமை) இடம்பெற்ற கவனயீர்ப்பு போராட்டத்திலேயே இவ்வாறு தெரிவித்தனர்.

தொடர்தும் அங்கு கருத்து தெரிவித்த கோ.ராஜ்குமார், இரண்டு முக்கிய இராணுவ மேஜர்கள் மீது அமெரிக்கா சமீபத்தில் பயணத் தடையுடன் வேறு பல நிபந்தனைகளை

02 ஆம் பக்கத்தில்...

## 'ஹெலிகொப்டர் கூட்டணி'க்குள் குழப்பம்?



சுதந்திர மக்கள் கூட்டமைப்பில் இருந்து விலகி தனித்து உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடுவது குறித்து ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஆராய்ந்து வருகின்றது என தகவல்கள் வெளியாகியுள்ளன.

சுதந்திரக் கட்சியின் வேட்பாளர்களுக்கு சந்தர்ப்பம் கிடைக்காமை, அங்கத்தவர்களாக உள்ள சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பில் கட்சி உறுப்பினர்களால் முன்வைக்கப்பட்ட ஆட்சேபனை போன்ற விடயங்களை கருத்திற்கொண்டு, கூட்டணியில் நீடிக்கலாமா வேண்டாமா என்பது குறித்து கலந்துரையாடி வருவதாக அறியமுடிகின்றது.

02 ஆம் பக்கத்தில்...

## சம்பிக்கவும் குமார வெல்கமவும் இணைந்தனர்!



பாட்டலி சம்பிக்க ரணவக்க தலைமையிலான 43 ஆவது படையணியும், குமார வெல்கம தலைமையிலான புதிய லங்கா சுதந்திரக் கட்சியும் புதிய உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளன.

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் குறித்த இரு தரப்பினரும் இணைந்து போட்டியிடும் வகையில் இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளது.

## 2019ஆம் ஆண்டு இணக்கம் தெரிவிக்கப்பட்ட காணிகளையே விடுவிக்க நடவடிக்கை!



கடந்த 2019ஆம் ஆண்டு விடுவிப்பதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்ட 110ஏக்கர் காணியினையே தற்போது விடுவிக்க பாதுகாப்பு தரப்பு இணங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அக்காலப் பகுதியில் காணிகளை விடுவிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட நிலையில் , ஜனாதிபதி தேர்தல் அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து, காணி விடுவிப்பு கைவிடப்பட்டது.

அதன் பின்னர் ஜனாதிபதியாக கோட்டாபய பதவியேற்றதை தொடர்ந்து காணி விடுவிப்புக்கள் நடவடிக்கைகள் அனைத்தும் முற்றாக கைவிடப்பட்டது.

இந்நிலையில், நேற்றைய தினம்

02 ஆம் பக்கத்தில்...


"சுவிஸ் மக்களின் நம்பிக்கையான காப்புறுதிகளுக்கும், ஓய்வுகாலத் திட்டமிடலுக்கும் நிபுணத்துவ வழிகாட்டி கல்லாறு சதீஷ்"

aaDaa Finance 0798000100

Aadaa Finance GmbH

Dr.(h.c) Nageswaran Arulrasa D.Litt

CEO



Eidgenössische Finanzmarktaufsicht Nr:35302

Fachmann für versicherung & vorsorge

Hauptstrasse 54

6015 Luzern

Switzerland

079 8000 100

arulnages@yahoo.com

finma :34598

25605: cicero


## உயர்தரப் பரீட்சை நடைபெறும் காலப்பகுதியில் தடையில்லா மின்சாரம்?



க.பொ.த உயர்தரப் பரீட்சை நடைபெறும் காலப்பகுதியில் தொடர்ச்சியாக தடையின்றி மின்சாரத்தினை விநியோகிப்பது தொடர்பிலான விசேட கலந்துரையாடலொன்று இன்று(திங்கட்கிழமை) இடம்பெறவுள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

02 ஆம் பக்கத்தில்...


MATHE BILDUNGSZENTRUM

கணித கற்கைநெறி மையம்

MBZ

கல்வியே துணை

பள்ளித் தலமனைத்தும் பேரெடுக்கும் பிள்ளைகள்.

அள்ளிப் பெற்றுவரும் நிறைவான புள்ளிகள்!

உள்ளதை சொல்வதெனில் எங்ஙனம் சாத்தியம்..

எள்ளளவும் பொய்யில்லை எட்டிவந்து பாரும்!!

- MATHE BILDUNGSZENTRUM

Mathe மகேந்திரா-வின் தெளிவான கற்பித்தலில் திருப்தியுறும் பெற்றோர்கள்.

S.MAHENDIRAN

076 431 83 79

mbz.mahe@gmail.com

MATHE மட்டுமல்ல

Deutsch, Franzósisch, Englisch,Gymi Prüfung

BMS, HMS, FMS, Gymi Probe

அத்தனைக்கும் கீழ்காணும் இடங்களில்

Oerlikon, Uster, Schaffhausen

# யாழ்.மாநகர சபையின் மேயர் வேட்பாளராக வித்தியாதரன்?



எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் யாழ் மாநகரசபையின் மேயர் வேட்பாளராக மூத்த ஊடகவியலாளரான நடேசபிள்ளை வித்தியாதரனை இலங்கை தமிழரசுக்கட்சி களமிறக்கவுள்ளதாக தெரியவருகின்றது.

இது தொடர்பில் தமிழரசுக் கட்சியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை.சேனாதிராஜாவை சமூகம் ஊடகம் தொடர்புகொண்டு கேட்டபோது,

யாழ் மாநகர முதல்வர் வேட்பாளர் தொடர்பில் தற்போதுவரை எவ்விதமான தீர்மானங்களும் எடுக்கப்படவில்லை எனவும் நாளை இடம்பெறவுள்ள கட்சியின் கூட்டத்திலேயே இது தொடர்பிலான இறுதித் தீர்மானம் எடுக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அதேவேளை இலங்கைத் தமிழரசுக் கட்சி யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான கட்டுப்பணத்தை 16 காலை செலுத்தியமை குறிப்பிடத்தக்கது.

# கொழும்பை சுற்றிவளைத்த போராட்டக்காரர்கள்! குவிக்கப்பட்டுள்ள பொலிஸார், இராணுவத்தினர்

கொழும்பு பௌத்தாலோக மாவத்தையில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் காரியாலய முன்பாக ஆரம்பிக்கப்பட்ட ஆர்ப்பாட்டம் கொள்ளுப்பிட்டி நோக்க ஆர்ப்பாட்ட பேரணியாக முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அனைத்து பல்கலைக்கழக மாணவர்கள், சிவில் செயற்பாட்டாளர்கள் உள்ளிட்ட போராட்டக்காரர்கள் கொழும்பு பௌத்தாலோக மாவத்தையில் திரண்டுள்ளனர்.

எதிர்ப்பு கோசங்களை எழுப்பிய வண்ணம் அவர்கள் அங்கு போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்

இந்த போராட்டம் கொழும்பு - லிப்டன் சுற்றுவட்டத்திற்கு அருகில் மேற்கொள்ளப்படவிருந்த நிலையில் அங்கு பொலிஸார் பாதுகாப்பை பலப்படுத்தியிருந்தனர்.

இதனையடுத்து இரகசியமாக போராட்ட இடத்தை மாற்றிய ஆர்ப்பாட்டக்காரர்கள் பௌத்தாலோக மாவத்தையில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் காரியாலய பகுதியில் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

வசந்த முதலிகேவை உடன் விடுதலை செய்ய வலியுறுத்தியும், பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குமாறு கோரியும், மக்கள் வாழக்கூடிய சுமூகமான நிலையை ஏற்படுத்த கோரியும் இந்த ஆர்ப்படம் மேற்கொள்ளப்படவுள்ளது.




இந்த நிலையில் அப்பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதுடன், பொலிஸார் கலகத்தடுப்பு பிரிவினர் மற்றும் இராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

# மலையகத்தின் மூத்த எழுத்தாளரான அமரர் மல்லிகை சி. குமாரின் நூல்களும் தீக்கிரையாகியுள்ளன



(தலவாக்கலை பி.கேதீஸ்)

தலவாக்கலை மிடில்டன் ( பெரிய மல்லியப்பு) தோட்ட குடியிருப்புத் தொகுதியில் ஞாயிறு (15) ஏற்பட்ட திடீர் தீ விபத்தில் மலையகத்தின் மூத்த எழுத்தாளரும் மலையக மக்களின் வாழ்வியலை தனது தத்ரூபமான எழுத்துக்களில் வெளிக்கொணர்ந்தவரும் பல சாஹித்ய விருதுகளுக்கு சொந்தக்காரருமான அமரர் மல்லிகை சி.குமார் அவர்களது விருதுகள் , சேமித்து வைத்திருந்த நூல்கள் , பல படைப்புக்கள், கையெழுத்து பிரதிகள் என அனைத்தும் தீக்கிரையாகியுள்ளன. மலையகத்தின் மூத்த எழுத்தாளரான அமரர் மல்லிகை சி. குமார் பெரிய மல்லியப்பு தோட்டத்தின் அடையாளமானவர்.

தொடர்ச்சியான பல அழுத்தங்களுக்கு மத்தியிலும் மலையக மக்களின் வாழ்வியலை அழகாக தத்ரூபமாக சிறுகதை மற்றும் கவிதை வடிவில் வெளிக்கொணர்ந்தவர்.அவரது முதலாவது நூலானா 'மாடும் வீடும்' எனும் கவிதைத் தொகுதியே இதற்கு சான்று. அவர் மறைந்தாலும் அவரது எழுத்துக்கள் அவர்களது குடும்பத்தினர்களால் பாதுகாக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று முன் தினம் ஏற்பட்ட திடீர் தீ விபத்தில் தீக்கிரையானமை கவலைக்குரிய விடயம்.

# திருகோணமலையில் மாபெரும் சக்திப்பொங்கல் நிகழ்வு...!





(அ . அச்சுதன்)

சுவிட்சர்லாந்து பேர்ன் மாவட்டம் மேல்மருவத்தூர் அருள்மிகு ஆதிபராசக்தி சித்தர்பீடம் கல்வி சமூகநலம் பண்பாடு அறப்பணி மையத்தினால் திருகோணமலையில் மாபெரும் சக்திப்பொங்கல் நிகழ்வு நேற்றையதினம் (14) இடம்பெற்றது.

இந்நிகழ்வு திருகோணமலை செல்வநாயகபுரம் இந்து மகா வித்தியாலத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வு, அறப்பணி மையத்தின் திருகோணமலை மாவட்ட பொறுப்பாளர் ஆசிரியர் சக்தி சரவணபவ ஆனந்தம் திருச்செந்துரன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலாளர் பொன்னம்பலம் தனேஸ்வரன் கலந்துகொண்டிருந்தார்.



சிறப்பு விருந்தினர்களாக கிராம சேவையாளர் செல்வி.சண்முகநாதன் சுகன்யா,சிரேஷ்ட ஊடகவியலாளர் அரசரெத்தினம் அச்சுதன், உப்புவெளி பொது நூலகத்தின்

நூலகர் கனகசுந்தரம் வரதகுமார், அதிபர்களான வைரமுத்து மகேஸ்வரன்,,நாகராசா காளிராசா மற்றும் முன்னாள் உதவிக்கல்விப்பணிப்பாளர் ஆர்.எஸ்.ஜெறோம் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

இதன்போது, 50 வறிய குடும்பங்களிற்கான பொங்கல் பொருட்களடங்கிய பொதிகளும்,13 அறப்பணியாளர்களுக்கான பொங்கல் பொருட்களடங்கிய பொதிகளும் வழங்கி வைக்கப்பட்டிருந்ததுடன்,உதயபுரி பிரதேசத்தை சேர்ந்த சாதாரண தரத்தில் சிறந்த பெறுபேறுகளை பெற்ற இரு மாணவர்கள் கௌரவிக்கப்பட்டதுடன் தலா பத்தாயிரம் பெறுமதியான கல்விக்கான உதவியும் வழங்கி வைக்கப்பட்டிருந்தது.

இவ்விதவிகள் சுவிட்சர்லாந்ததை சேர்ந்த சக்தி திரு மதியழகன் நகுலேஸ்வரனின் நிதி அனுசரணையிலும் அறப்பணி மையத்தின் நிறுவனர் சக்தி சுவிஸ் சுரேஷ் சகோதரரின் ஏற்பாட்டிலும் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஐக்கிய மக்கள் சக்தியின் வரிசைப்படுத்தல் படையின் திகாமடுல்ல மாவட்ட பணிப்பாளராக றிஸ்கான் முகம்மட் நியமனம்!



ஐக்கிய மக்கள் சக்தியின் சமகி வரிசைப்படுத்தல் படையின்(Samagi Wihidum Balaganaya) திகாமடுல்ல மாவட்ட பணிப்பாளராக றிஸ்கான் முகம்மட்,ஐக்கிய மக்கள் சக்தியின் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவினால் ஞாயிறு(15) நியமனக்கடிதம் வழங்கி வைக்கப்பட்டது.

களுத்துறையில் ஐக்கிய மக்கள் சக்தியின் சமகி வரிசைப்படுத்தல் படையின் தவிசாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஹேஷா விதானகே தலைமையில் இடம்பெற்ற, சமகி வரிசைப்படுத்தல் படையின் மாவட்ட மாநாட்டில் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும்,எதிர்க்கட்சித்தலைவரு மான சஜித் பிரேமதாசாவினால் இந் நியமனக்கடிதம் வழங்கி வைக்கப்பட்டது.

றிஸ்கான் முகம்மட் ஐக்கிய மக்கள் சக்தி இளைஞர் அணியின் தேசிய செயற்குழு உறுப்பினராகவும், அம்பாறை மாவட்ட செயலாளராகவும் உள்ளமை குறிப்பிடத்தக்கது

# கந்தளாய் பிரதேசத்திலுள்ள பாற்பண்ணையாளர்களுக்கு மேய்ச்சல் தரைகளை பேற்றுத் தருமாறு பாற்பண்ணையாளர்கள் கோரிக்கை

(எப்.முபாரக்)

திருகோணமலை மாவட்டத்தில் கந்தளாய் பிரதேசத்திலுள்ள பாற்பண்ணையாளர்களுக்கு மேய்ச்சல் தரைகளை பெற்றுத் தருமாறு பாற்பண்ணையாளர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

கந்தளாய், கிண்ணியா,தம்பலாகாமம் மற்றும் முள்ளிப்பொத்தானை போன்ற பகுதிகளிலுள்ள பாற்பணையாளர்களுக்கு கந்தளாய் சீனித்தொழிற்சாலை பகுதியில் 2000 ஏக்கர் நிலப்பரப்பு அரசாங்கத்தினால் ஒதுக்கப்பட்டுள்ள போதிலும் 500 ஏக்கர் நிலப்பரப்பினை அப்பகுதியிலுள்ள சிங்கள அடாவடித் தனத்தில் ஈடுபட்டுள்ளவர்களினால் கையப்படுத்தப்பட்டுள்ளதாக கால்நடை வளர்ப்பாளர்கள் தெரிவிக்கின்றனர்.



யேய்ச்சல் தரைகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள காணிகளில் 500 ஏக்கரில் வேளாண்மை செய்து கொண்டு மாடுகளை பிடிப்பது,கால்கடைகளை சட்டவிரோத துப்பாக்கிகளினால் சுடுவது,இறைச்சிக்காக அறுப்பது மற்றும் கால்நடை உரிமையாளர்களை தாக்குவது போன்ற செயற்பாடுகளில் ஈடுபட்டு வருவதாக தெரிவிக்கின்றனர்.

இரவு வேளைகளில் கால் நடை உரிமையாளர்களின் வண்டிகளை பறிப்பது,போதையில் சென்று ரகளையில் ஈடுபடுவது போன்ற செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றார்கள்.

இவ்விடயத்தில் தீர்க்கமான முடிவொன்றினை பெற்றுத் தருமாறு பாதிக்கப்பட்டுள்ள பாற்பண்ணையாளர்கள் தெரிவிக்கின்றனர்.இவ்விடயம் குறித்து பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தாலும் பொலிஸார் பக்கச் சார்பாக செயற்படுகின்றனர். எங்களிடம் பணத்தினை பெற்று கொடுக்கின்றார்கள்.

இதற்கு சரியான தீர்வொன்றினை பெற்றுத் தருமாறு கோரிக்கை விடுக்கின்றனர்.

## முதுகெலும்புள்ள தலைவர் எமக்கு...

விதித்தது. சுமார் 2 வாரங்களுக்கு முன்னர், இலங்கையின் முன்னாள் இரண்டு ஜனாதிபதிகளுக்கு கனடா தடை விதித்தது.

இந்த இரண்டு ஜனாதிபதிகளுடன் தொடர்புள்ள எந்தவொரு கனேடியர்களும் தண்டிக்கப்படுவார்கள் என்பது மிகவும் கவனிக்கத்தக்கது. இவையெல்லாம் நம் மக்களுக்கு என்ன சொல்கின்றன?

உலகமே தமிழர்களின் பின்னால் நிற்கிறது, ஆனால் முதுகெலும்புள்ள தலைவர் எமக்கு இல்லை.

எமது தாய்மார்களுடன் இணைந்து தமிழ் இறையாண்மைக்காக யாரேனும் ஒருங்கிணைத்து குரல் கொடுக்க வேண்டும் என விரும்புகிறோம்.

இறையாண்மை என்பது ஒரு கெட்ட வார்த்தை அல்ல, அது ஒரு நட்பான எளிமையான சுதந்திர வார்த்தை.

குறிப்பாக அமெரிக்காவுடன் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தை வலியுறுத்துமாறு எமது தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களை வலியுறுத்துகிறோம்.கொழும்பைக் கண்டு பயந்தால் அமெரிக்காவிடம் பேசுங்கள்.

சீன ஆதிக்கத்தை ஒடுக்க அமெரிக்கத் தலைமையுடன் இந்தியப் பெருங்கடலைப் பாதுகாக்கும் நாடுகள் குக் தீவுகளுக்கு இறையாண்மையை வழங்கின.இங்கும் இறையாண்மைக்கான வலுவான சாத்தியம் உள்ளது என தெரிவித்தார்.

## 2019ஆம் ஆண்டு இணக்கம்...

ஞாயிற்றுக்கிழமை தேசிய தைப்பொங்கல் நிகழ்வில் கலந்து கொள்வதற்காக யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த ஜனாதிபதி தலைமையில், பாதுகாப்பு அமைச்சின் செயலர், முப்படைகளின்தளபதிகள், படைகளின் பிரதானி பங்குபற்றுதலுடன் யாழ் மாவட்ட செயலகத்தில் காணிவிடுவிப்பு தொடர்பில் விசேட கூட்டம் இடம்பெற்றிருந்த நிலையில், கீரிமலை, காங்கேசன் துறை , மயிலிட்டி , பலாலி வடக்கு ஆகிய பகுதிகளில் முப்படையினரின் வசம் இருக்கும் பொதுமக்களின் காணிகளை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக படைத்தரப்பு ஜனாதிபதியின் முன் உறுதி அளித்தது.

குறித்த காணிகளில் 30 ஏக்கர் கடற்படையினரின் கட்டுப்பாட்டிலும் மிகுதி ராணுவத்தினரின் கட்டுப்பாட்டிலும் உள்ளது.

இக்காணிகள் கடந்த 2019 ஆம் ஆண்டு காலப் பகுதியில் விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்ட காணிகளே எனவும், புதிதாக காணிகள் எதனையும் விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட வில்லை என தெரிவிக்கப்படுகிறது.

## ஜனாதிபதியுடனான கலந்துரையாடலில்...

காணி உடனடியாக விடுவிக்கப்படலாம் என சொல்லுகின்றார்கள். உடனடியாக விடுவிக்கப்படலாம் என பல நாட்களாக சொல்லுகின்றார்கள் ஆனால் இன்னும் விடுவிக்கப்படவில்லை, அதனால் நேற்றைய கூட்டத்தில் சொல்லப்பட்ட விடயங்கள் தொடர்பாக எங்களுக்கு பெரிதாக நம்பிக்கை இல்லை என தெரிவித்துள்ளார்.

## ‘ஹெலிகொப்டர் கூட்டணி’க்குள்...

பெரும்பாலும் இது சம்பந்தமாக இன்று(திங்கட்கிழமை) முடிவெடுக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை, சுதந்திர மக்கள் கூட்டமைப்பின் நிறைவேற்றுக்குழு இன்று கூடுகின்றது.

வேட்புமனு தாக்கல் ஆராயவே இக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## உயர்தரப் பரீட்சை நடைபெறும்...

பரீட்சை அட்டவணைக்கு அமைவாக, பரீட்சைக்கு முன்னர் தொடர்ச்சியாக மின்சார விநியோகத்தை வழங்குமாறு கல்வித்திணைக்களத்தினால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக சபையின் பொது முகாமையாளர் ரொஹான் சேனவிரத்ன தெரிவித்துள்ளார்.

இதற்கமைய இன்று கூடி இறுதி முடிவு எடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் ஆலோசனையும் பெறப்படும் என அவர் கூறியுள்ளார்.

# கல்முனையில் ஐ.தே.க. முதன்மை வேட்பாளராக களமிறங்குகிறார் ஏ.எம்.ஜெமீல்

(எம்.எம்.அஸ்லம்)

முன்னாள் கிழக்கு மாகாண சபையின் குழுத் தலைவரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தேசிய அமைப்பாளருமான கலாநிதி ஏ.எம்.ஜெமீல், எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் கல்முனை மாநகர சபைக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் முதன்மை வேட்பாளராக களமிறங்கவுள்ளார்.

அண்மையில் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொண்ட இவர், அக்கட்சியின் கல்முனைத் தொகுதி அமைப்பாளராகவும் கிழக்கு மாகாண தமிழ், முஸ்லிம் பிரதேசங்களுக்கான ஒருங்கிணைப்பாளராகவும் கட்சியின் தலைவரான ரணில் விக்கிரமசிங்கவினால் நியமிக்கப்பட்டிருக்கிறார். அத்துடன் கட்சியின் புத்திஜீவிகள் அமைப்பான ஐக்கிய தொழில்வாண்மை பேரவையின் நிறைவேற்றுக்குழு உறுப்பினராகவும் அவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த 2006ஆம் ஆண்டு கல்முனை மாநகர சபைத் தேர்தலில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸில் போட்டியிட்டு, உறுப்பினராக தெரிவாகியிருந்த ஏ.எம்.ஜெமீல், 2008 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற கிழக்கு மாகாண சபை தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் போட்டியிட்டு வெற்றியீட்டி, இரு தடவைகள் மாகாண சபை உறுப்பினராகவும் 2012 முதல் 2015ஆம் ஆண்டு வரை மாகாண சபையின் முஸ்லிம் காங்கிரஸ் குழுத் தலைவராகவும் பதவி வகித்திருந்தார்.

இக்காலப்பகுதியில் அக்கட்சியின் உயர்பீட உறுப்பினராக, இளைஞர் காங்கிரஸ் தேசிய அமைப்பாளராக, சர்வதேச விவகாரங்களுக்கான பிரதிப் பணிப்பாளராக என்று பல்வேறு பொறுப்புகளை வசித்திருந்தார்.

2015ஆம் ஆண்டு பொதுத் தேர்தலின் போது அகில இலங்கை மக்கள் காங்கிரஸில் இணைந்து கொண்ட இவர், அக்கட்சி சார்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் வேட்பாளராக இடம்பெற்றிருந்தார்

அதனைத் தொடர்ந்து அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தேசிய அமைப்பாளராகவும் அரச வர்த்தக கூட்டுத்தாபனத்தின் தவிசாளராகவும் பதவிகளை வகித்திருந்தார்.



தற்போது ஐக்கிய தேசிய கட்சியில் இணைந்து, கல்முனை மாநகர சபைக்கு அக்கட்சி சார்பில் பலமான அணியொன்றுடன் முதன்மை வேட்பாளராக களமிறங்கியுள்ள ஜெமீல், கிழக்கு மாகாணத்திலுள்ள தமிழ், முஸ்லிம் பெரும்பான்மை உள்ளூராட்சி மன்றங்களுக்கு ஐ.தே.க. சார்பில் போட்டியிடுவதற்கான வேட்பாளர்களை தெரிவு செய்யும் பணிகளிலும் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றார்.

# மின்சாரவசதி இல்லாத மாணவர்களுக்கு 60 சோலார் பல்புகளை வழங்கிய ரோட்டரி கழகம்!









( வி.ரி. சகாதேவராஜா)

மட்டக்களப்பு ரோட்டரி கழகம் மட்டு.மேற்கு வலயத்தில் மிகவும் பின்தங்கிய மின்சாரம் இல்லாத 60 மாணவர்களுக்கு சூரிய ஒளியில் இயங்கும் மின் குமிழ்களை வழங்கி வைத்தது.

மட்டக்களப்பு ரோட்டரிக் கழக தலைவர் றோட்டரியன் பி.ரமணதாச தலைமையில் இந்த நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

குறிஞ்சாக்கேணி பாவற்கொடிச்சேனை உள்ளிட்ட மூன்று கிராமங்களில் மின்சாரமின்றி வாழும் 60 மாணவர்களுக்கு சூரிய ஒளியில் இயங்கும் மின் குமிழ்கள் வழங்கி வைக்கப்பட்டன.

நிகழ்வுகளில் கிழக்கு மாகாண கல்வி பணிப்பாளர் செல்வி அகிலா கனகசூரியம் பிரதம அதிதியாக கலந்து கொண்டு பல்புகளை வழங்கி வைத்தார்.

நிகழ்வில் புதிதாக நியமனம் பெற்ற கிழக்கு மாகாண கல்வி பணிப்பாளர் செல்வி அகிலாவிற்கு ரோட்டரி கழகதா தலைவர் ரமணன் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

# தமிழரசுக் கட்சியின் காரைதீவுக் கிளை புனரமைப்பு!





( வி.ரி.சகாதேவராஜா)

இலங்கை தமிழரசுக் கட்சியின் காரைதீவு கிளை நேற்று முன்தினம் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் முன்னிலையில் தெரிவு செய்யப்பட்டது .

குறித்த கூட்டம் காரைதீவு பிரதான நூலக மண்டபத்தில் தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் தலைமையில் நடைபெற்றது .

தமிழரசுக்கட்சி உறுப்பினர்கள் கலந்து கொண்ட இந்த கூட்டத்தில் புதிய கிளை உறுப்பினர்கள் தேர்வு செய்யப்பட்டார்கள். அதன்படி தலைவராக தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில், செயலாளராக கதிர்காமத்தம்பி செல்வ பிரகாஷ், பொருளாளராக கணபதிப்பிள்ளை தட்சணாமூர்த்தி, உப தலைவராக முன்னாள் தவிசாளர் யோ. கோபிகாந்த், உபசெயலாளராக தர்மகர்த்தாத. சிவகுமார் மற்றும் ஏனைய உறுப்பினர்களும் தெரிவுசெய்யப் பட்டார்கள் .

எதிர்வரும் உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான வேட்பாளர்களை தெரி செய்வதற்கான கூட்டத்தை இன்றும் நாளையும் காரைதீவின் நான்கு வட்டாரங்களிலே நடாத்த தீர்மானிக்கப்பட்டது.

அத்தோடு கட்சியின் எதிர்கால வேலைத் திட்டங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

# தலவாக்கலையில் பாரிய தீ குடியிருப்புகள் எரிந்து நாசம்









(தலவாக்கலை பி.கேதீஸ்)

தலவாக்கலை மிடில்டன் (பெரிய மல்லியப்பு) தோட்ட லயன் தொடர் தொழிலாளர் குடியிருப்பொன்றில் நேற்று முன் தினம் இரவு (15) ஏற்பட்ட திடீர் தீ விபத்தில் 12 வீடுகள் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளதாக தலவாக்கலை பொலிஸார் தெரிவித்தனர்.

இத்தீ விபத்தில் 7 தொழிலாளர் குடியிருப்புகள் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளதோடு 5 தொழிலாளர் குடியிருப்புகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன, இதனால் 12 குடும்பங்களைச் சேர்ந்த 49 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். பாதிக்கப்பட்ட 3 குடும்பங்கள் தலவாக்கலை தமிழ் மகா வித்தியாலய பாடசாலை மண்டபத்திலும் ஏனையோர் உறவினர் வீடுகளிலும் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இத்தீ பரவல் ஏற்பட்டதையடுத்து தோட்ட மக்கள், தலவாக்கலை பொலிஸார் என பலரின் முயற்சியில் பல மணி நேர போராட்டத்தின் பின்னர் தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

இந்த தீப்பரவல் காரணமாக எவருக்கும் பாதிப்பு ஏற்படாத போதிலும் தொழிலாளர்களின் பெறுமதிமிக்க உடைமைகள் உட்பட உடு துணிகள், தளபாடங்கள் அத்தியாவசிய ஆவணங்கள் உள்ளிட்ட அனைத்தும் தீக்கிரையாகியுள்ளன.

தீ பரவல் ஏற்பட்டதற்கான காரணம் இதுவரை கண்டறியபடாத நிலையில் இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை தலவாக்கலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். அத்துடன் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலர் உணவுப்பொருட்களை வழங்க தோட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுத்துள்ளதாக தோட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது.

# தேர்தலில் போட்டியிடுவதற்காக 06 அரசியல் கட்சிகளும் 02 சுயேச்சைக் குழுக்களும் கட்டுப்பணம் செலுத்தியுள்ளது

(தலவாக்கலை பி.கேதீஸ்)

நுவரெலியா மாவட்டதிலுள்ள நுவரெலியா மாநகரசபை, ஹட்டன்-டிக்கோயா நகரசபை, தலவாக்கலை- லிந்துலை நகரசபை, நுவரெலியா பிரதேசசபை, வலப்பனை பிரதேசசபை, கொத்மலை பிரதேசசபை, ஹங்குராங்கெத்த பிரதேசசபை, அம்பகமுவ பிரதேசசபை, அக்கரப்பத்தனை பிரதேசசபை, கொட்டக்கலை பிரதேசசபை, நோர்வூட் பிரதேசசபை, மஸ்கெலியா பிரதேசசபை ஆகிய 12 உள்ளூராட்சி சபைகள் 2023 தேர்தலில் போட்டியிடுவதற்காக நேற்று (16) திங்கட்கிழமை நண்பகல் 12 மணி வரை அங்கீகரிக்கப்பட்ட 06 அரசியல் கட்சிகளும் 02 சுயேச்சைக் குழுக்களும் கட்டுப்பணம் செலுத்தியுள்ளதாக நுவரெலியா உதவி தேர்தல் ஆணையாளர் கே.ஈ.எல்.எஸ். களுகம்பிடிய தெரிவித்தார்.




ஐக்கிய தேசிய சுதந்திர முன்னணி, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மற்றும் தேசிய மக்கள் சக்தி ஆகிய அனைத்து கட்சிகளும் நுவரெலியா மாவட்டத்திலுள்ள 12 உள்ளூராட்சி மன்ற தேர்தலில் போட்டியிடுவதற்கான கட்டுப்பணத்தை வைப்பிலிட்டுள்ளன.

சோசலிச சமத்துவக் கட்சி மஸ்கெலியா பிரதேச சபைக்கும், புதிய ஜனநாயக முன்னணி அம்பகமுவ பிரதேச சபைக்கும், மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி ஹட்டன் டிக்கோயா நகரசபைக்கும், மஸ்கெலியா பிரதேச சபைக்கும், வலப்பனை பிரதேச சபைக்கும், அம்பகமுவ பிரதேச சபைக்கும் நோர்வூட் மற்றும் ஹங்குரான்கெத்த பிரதேச சபைகளுக்கான கட்டுப்பணத்தை வைப்பிலிட்டுள்ளன. கட்டுப்பணத் தொகையை வைப்பிலிட்டுள்ள 02 சுயேச்சைக் குழுக்களும் கொட்டகலை பிரதேச சபைக்கு மாத்திரம் கட்டுப்பணத்தை வைப்பிலிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பெரியநீலாவணை புலவர்மணியில் ஸ்மார்ட் வகுப்பறை திறந்துவைப்பு





(ஏ.எல்.எம். ஷினாஸ்)

கல்முனை வலயத்திற்குட்பட்ட பெரியநீலாவணை புலவர்மணி சரிபுத்தீன் மகா வித்தியாலயத்தில் ஸ்மார்ட் வகுப்பறையை திறந்து வைக்கும் நிகழ்வு நேற்று (16.01.2023) பாடசாலையின் பிரதி அதிபர் எம்.சி.நஸார் ஒருங்கிணைப்போடு அதிபர் எம்.எம்.முஹம்மட் நியாஸ் தலைமையில் நடைபெற்றது.

கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.சஹுதுல் நஜீம் பிரதம அதிதியாக கலந்து கொண்டு சுமார் 1.2 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் மாணவர்களின் நவீன கற்றலுக்கு தேவையான 'ஸ்மார்ட் போர்ட்' உத்தியோகபூர்வமாக வழங்கி வைக்கப்பட்டது. கற்றல் கற்பித்தல் செயற்பாட்டிற்கு தேவையான நவீன முறையில் வடிவமைக்கப்பட்ட வகுப்பறையும் இதன் போது திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் மருதமுனை ஹேன்லூம் சிட்டி (Handloom City) நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளரும் மஸ்ஜிதுல் மக்பூலியா ஜும்ஆ பள்ளிவாசல் தலைவருமான எஸ்.எல்.எம். ஜெமீல், கல்முனை கோட்டக்கல்வி பணிப்பாளர் வி.எம்.ஸம்ஸம், ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் சம்மாந்துறை ஹுதா சமூர்த்தி வங்கி முகாமையாளர் எம்.ஐ.எம் முஜீப் விசேட அதிதியாகவும் கலந்து கொண்டனர்.

இதில்பாடசாலையின் பழைய மாணவர்சங்க உறுப்பினர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் என கலந்து கொண்டனர்.

# மருந்து தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்ய காரைதீவு பத்ரகாளி அம்மன் ஆலயம் முன்மாதிரி!

( காரைதீவு சகா)

காரைதீவு பிரதேச வைத்தியசாலையில் நிலவும் மருந்துத் தட்டுப்பாட்டை பூர்த்தி செய்யும் வகையில் காரைதீவு பத்ரகாளி அம்மன் ஆலயம் ஒரு தொகுதி மருந்து பொருட்களை வழங்கியுள்ளது.

சமகால நெருக்கடியிலிருந்து மீள வைத்தியசாலைக்கு உதவி செய்த ஆலயங்களுள் கந்தசுவாமி ஆலயம் மற்றும் பத்ரகாளி அம்மன் ஆலயம் முன்மாதிரியாக திகழ்கிறது.

இவ் ஆலயம் ரூபா 50,000.00 பெறுமதியான மருந்துப் பொருட்களை கொள்வனவு செய்து அன்பளிப்புச்செய்துள்ளது.





ஆலயத்தலைவர் எஸ்.இராமநாதன் தலைமையிலான நிர்வாகத்தினர் இந்த மருந்து பொருட்களை வைத்தியசாலை பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் நடராஜா அருந்திரனிடம் கையளித்தனர் .

மருந்து தட்டுப்பாடு, தொடர்பாக பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் நடராஜா அருந்திரன் உதவும்படி மக்களிடம் பகிரங்கமாக கோரியிருந்தமை தெரிந்ததே.

# பெரியநீலாவணை போலிஸ் நிலையத்தில் நடைபெற்ற பொங்கல் நிகழ்வு







(ஏ.எல்.எம். ஷினாஸ்)

பெரியநீலாவணை பொலிஸ் நிலையம் மற்றும் பொலிஸ் நிலையத்தின் ஆலோசனைக் குழு என்பன ஒன்றிணைந்து ஏற்பாடு செய்த தைப்பொங்கல் நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை (15.01.2023) பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆர்.ஜீ.துஸார திலங்க ஜெயலால் தலைமையில் நடைபெற்றது.

பாண்டிருப்பு சிவன் கோவில் குருக்கள் எஸ்.தர்மலிங்கம் முன்னிலையில் நடைபெற்ற இந்த பொங்கல் நிகழ்வில் பொலிஸ் நிலைய ஆலோசனைக் குழுத் தலைவர் சாஜித் முனீர் உட்பட ஆலோசனைக் குழு உறுப்பினர்கள், பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்கள் பிரதேச மக்கள் என பலர் கலந்து கொண்டனர்.

# அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மயில் சின்னத்தில் அனைத்து சபைகளிலும் தனித்து போட்டியிடும் மக்கள்

## காங்கிரஸ் தலைவர் ரிசாட் எம்.பி







(ஹஸ்பர்)

திருகோணமலை மாவட்டத்தில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் இம் முறை நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மயில் சின்னத்தில் அனைத்து சபைகளிலும் தனித்து போட்டியிடும் என மக்கள் காங்கிரஸின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிசாத் பதியுதீன் தெரிவித்தார்.

திருகோணமலை இறக்கக்கண்டி பிரதேசத்தில் இன்று (15) இடம் பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டதன் பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் உரையாற்றுகையில்

திருகோணமலை மாவட்டத்தை பொறுத்தமட்டில் பல பிரச்சினைகள் நண்டகாலமாக தீர்க்கப்படாமல் உள்ளன இவ்வாறான வற்றை தீர்க்கவும் பிரதேச பொருளாதார அபிவிருத்திகளை மேற்கொள்ளவும் எமது கட்சி சகல சபைகளளையும் கைப்பற்றுவதற்காக நல்ல பல வேட்பாளர்கள் களமிறக்கப்பட்டுள்ளார்கள். காணி பிரச்சினை இன்னோரன்ன பல பிரச்சினைகள் உள்ளன இதனை கருத்திற்கொண்டு ஆட்சியை கைபற்றுவதன் ஊடாக ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் ஊடாக மக்களுடைய பிரச்சினைகளை தீர்க்க நடவடிக்கை எடுப்போம் என்றார்.

# 150 குடும்பங்களுக்கு உலர் உணவு போதிகள் வழங்கி வைப்பு






(ஹஸ்பர்)

வன்னி ஹோப் அவுஸ்திரேலியா நிறுவனத்தின் அனுசரணையில் 150 குடும்பங்களுக்கு உலர் உணவு பொதிகள் வழங்கி வைக்கும் நிகழ்வு சனிக்கிழமை (14) நடைபெற்றது .

திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலகத்திற்குட்பட்ட தேவாநகர் மற்றும் அதனை அண்டிய பின்தங்கிய கிராமத்தில் வசிக்கின்ற வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் குடும்பங்களுக்கு உலர் உணவு பொதிகள் வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று தேவாநகர் முன்பள்ளி மைதானத்தில் வன்னி ஹோப் நிறுவனத்தின் இலங்கைக்கான பணிப்பாளர் எம்.ரீ.எம்.பாரிஸ் தலைமையில் இடம்பெற்றது.

இவ் உலர் உணவு பொதியினை ஐக்கிய அமெரிக்காவில் வசிக்கின்ற வைத்தியர் நாகே நாகேந்திரன் மற்றும் பாலா சந்திரன் நல்லையா ஆகியோரின் நிதி அனுசரனையில் வன்னி ஹோப் நிறுவனத்தின் ஒழுங்கமைப்பில் திருமலை மக்கள் சேவை மன்றத்தின் ஊடாக இவ் உலர் உணவு பொதிகள் வழங்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

இந் நிகழ்வில் வன்னி ஹோப் அவுஸ்திரேலியா நிறுவனத்தின் உத்தியோகத்தர்கள் மற்றும் சமுக நலன் விரும்பிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

# தோற்றுநோய் தோடர்பாக அம்பாறை முதல் அறுகம்பை வரை விழிப்புணர்வு பைசிக்கிள் பவனி!

## திருக்கோவிலில் இளநீர் தாகசாந்தி!









மக்கள் மத்தியில் பரவி வரும் தொற்று நோய் தொடர்பான விழிப்புணர்வு சைக்கிள் பவனி அம்பாறை தொடக்கம் பொத்துவில் அறுகம்பை வரை நேற்று முன்னெடுக்கப்பட்டது.

இப்பவனி அம்பாறை பொது வைத்தியசாலை ஏற்பாட்டில் இடம் பெற்றது.

அம்பாறை பொது வைத்தியசாலை ஊழியர்கள் மற்றும் படையினர் இணைந்து மக்கள் மத்தியில் பரவி வரும் தொற்று நோய்(நீரழிவு இதயநோய் உயர் இரத்த அழுத்தம் சீறுநீரகநோய்கள் புற்று நோய்) தொடர்பான விழிப்புணர்வு சைக்கிள் பவனி நேற்றைய தினம் அம்பாறை தொடக்கம் பொத்துவில் அறுகம்பை வரை இடம்பெற்றது.

இப்பயணமானது அம்பாறையில் இருந்து ஆரம்பமாகி இறக்காமம் அக்கரைப்பற்று ஊடாக திருக்கோவில் பாதை ஊடாக அறுகம்பையை சென்றடைந்தது.

இவ் விழிப்புணர்வு நடவடிக்கையில் பங்குபற்றியவர்களுக்கான தாகசாந்தி ஏற்பாடானது திருக்கோவில் பிரதேச செயலகத்தின் ஊடாக பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரன் தலைமையில் காஞ்சிரங்குடா முகாம் படையினரின் உதவியுடன் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் திருக்கோவில் பிரதேச செயலாளர் த.கஜேந்திரன் உதவி பிரதேச செயலாளர் க.சதிசேகரன் மற்றும் கட்டளைத்தளபதி விபுலசந்திரஸ்ரீ காஞ்சிரங்குடா படைப்பிரிவின் கட்டளை தளபதி மற்றும் நிருவாக உத்தியோகத்தர் ரி.மோகனராஜா மற்றும் முன்னாள் மற்றும் தற்போதைய கிராம சேவையாளர் நிருவாக உத்தியோத்தர், திருக்கோவில் ஆதாரவைத்திய சாலை உத்தியோத்தர் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் படையினர் என பலரும் கலந்து கொண்டனர்..

# பிரமாண்டமாக இடம் பெற்ற கல்விச் சாதனையாளர்கள் கௌரவிப்பு விழா!



( வி.ரி. சகாதேவராஜா)





காரைதீவு மண்ணில் இதுவரை இடம்பெற்றிராதவகையில் பிரமாண்டமான முறையில் கல்விச் சாதனையாளர் கௌரவிப்பு விழா நேற்று முன்தினம் இடம் பெற்றது.

Tracks Asco அமைப்பினர் இணைந்து காரைதீவு மண்ணில் உயர்தர பரீட்சையில் சித்தி பெற்று 2023 ஆம் ஆண்டு பல்கலைக் கழகத்துக்கு தெரிவு செய்யப்பட்ட 27 மாணவர்களை கௌரவிக்கும் விழா, அமைப்பின் தலைவர் அ.விவேகானந்தராஜா தலைமையில் காரைதீவு விபுலானந்த கலாசார மண்டபத்தில் நேற்று முன்தினம் கோலாகலமாக நடைபெற்றது.

இவ்விழாவில் முதன்மை அதிதியாக கிழக்கு பல்கலைக்கழக கல்வித்துறை ஓய்வு நிலை பேராசிரியர் கலாநிதி செ.அருள்மொழி கலந்து சிறப்பித்தார்.

கனடாவில் வாழும் காரைதீவைச் சேர்ந்த மண்பற்றாளர் வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி டாக்டர் அருளானந்தம் வரதராசா தலைமையிலான TRAKS ,ASCO SEDAK அமைப்பினர் வருடாந்தம் நடாத்திவரும் இவ் ஊக்குவிப்பு செயற்பாட்டை முதன் முறையாக அரங்க விழாவாக ஏற்பாடு செய்திருந்தனர்.

அமைப்பின் செயலாளர் எஸ்.நந்தகுமார் வரவேற்புரை வழங்க, விழா நிகழ்ச்சிகளை உதவி கல்வி பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா நெறிப்படுத்தி தொகுத்தளித்தார்.

காரைதீவில் உயர்தர பரீட்சையில் மூன்று பாடங்களிலும் 3அ சித்தி பெற்றமாணவிகளான லோகநாதன் புவித்ரா(மருத்துவம்), சகாதேவராஜா டிவானுஜா(மருத்துவம்) தங்கவடிவேல் டயானு(மருத்துவம்) ரஜிநாதன் துர்க்கா (பொறியியல்) ஆகிய மாணவர்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாய் வீதம் வழங்கப்பட்டது.

மேலும், ஒவ்வொரு துறையிலும் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று பல்கலைக்கழகங்களுக்கு தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கு 50 000/= ரூபாவும் அத்துடன் ,அகில இலங்கையில் உயிரியல் பிரிவில் முதலாம் இடம் பெற்ற காரைதீவைச் சேர்ந்த தமிழ்வண்ணன் துவாரகேஸ் அவர்களுக்கு இரண்டேகால் லட்சம் ரூபாய் பெறுமதியான தங்கப்பதக்கம் வழங்கி கௌரவப்படுத்தினர்.

நிதி அனுசரணையை அஸ்கோ அமைப்பும் ,காரைதீவிலிருந்து புலம் பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் பரோபகாரிகளும் வழங்கி இருந்தனர்.

நட்சத்திர அதிதிகளாக கிழக்கு மாகாண மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் எஸ்.புவனேந்திரன், காரைதீவு பிரதேச செயலாளர் சிவ ஜெகராஜன், கிழக்கு பல்கலைக்கழக தொழில்நுட்ப துறை பீடாதிபதி கலாநிதி த.மதிவேந்தன், பிளாஸ்டிக் சத்திர சிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி டாக்டர் நடேசன் பகிரதன், பொது சத்திர சிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி டாக்டர் நடேசன் அகிலன், வைத்திய அதிகாரி டாக்டர் எஸ்.சாளினி, வைத்திய அதிகாரி டாக்டர் எம்.சகானுஜா, எந்திரி இ.துசாந்த் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

வித்திய அதிதியாக உதவி கல்வி பணிப்பாளர் ஆ.பார்த்தீபன், விஞ்சைமிகு அதிதிகளாக ஆசிரியர்களான ரி.தெய்வீகன், எஸ்.தேவகுமார், கே.ருத்திரமூர்த்தி, எஸ்.லிசிகரன், எஸ்.உதயராஜா ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

அமைப்பின் பொருளாளர் எம்.சுந்தரராஜன் உறுப்பினர் எஸ்.புவனேந்திரராஜா ஆகியோர் அமைப்பின் செயற்பாடுகள் பற்றி கூறினர்.

சாதனை மாணவர்களின் பெற்றோர்கள் உயர்தர மாணவர்கள் ஆசிரியர்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தார்கள்.

# இரண்டு ரோட்டரி சேவையாளர்களுக்கு கௌரவம் !

(வி.ரி.சகாதேவராஜா)

மட்டக்களப்பு ரோட்டரிக் கழகம் இரண்டு ரோட்டரி சேவையாளர்களை பாராட்டி கௌரவித்தது. மட்டக்களப்பு ரோட்டரி கழக தலைவர் றோட்டரியன் பி.ரமணதாஸ தலைமையில் பாராட்டு விழா நேற்று நடைபெற்றது.

சுகாதாரத் துறைக்கு பாரிய பங்களிப்பு செய்து சேவையாற்றிவரும் மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளர் டாக்டர் குண.சுகுணன் மற்றும் அண்மையில் கிழக்கு மாகாண மதுவரித் திணைக்கள உதவி ஆணையாளராக பதவி உயர்வு பெற்ற றோட்டரியன் சண்முகம் தங்கராஜா அவர்களுக்கும் தலைவர் ரமணதாஸ பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்.



# அகத்தியர் நீராடிய மகாவலி கங்கையில் மரகதலிங்கத்திற்கு அபிஷேகம்!






**(விபுலமாமணி வி.ரி.சகாதேவராஜா)**

2000 ஆண்டுகளுக்கு முன்பு தமிழ் மொழிக்கான 'அகத்தியம்' என்ற முதல் இலக்கண நூலை எழுதியவரும் சப்தரிசிகளில் ஒருவருமான அகத்திய முனிவர் இலங்கையில் ஆடிஅமாவாசையில் நீராடிய மகாவலி கங்கையில் மரகதலிங்கத்திற்கு அபிஷேகம் இடம் பெற்றது.

அகத்தியர் வாழ்ந்த கங்குவேலி பிரதேசத்திற்கு இலங்கை சித்தர்கள் குரல் அமைப்பினர் விஜயம் செய்தனர்.

சித்தர்கள் குரல் அமைப்பின் ஸ்தாபக தலைவர் சிவசங்கர் ஜி ஜி தலைமையிலான குழுவினர் நேற்றைய தினம் திருகோணமலை மாவட்டத்திலுள்ள கூடிய மூதூர் கங்கு வேலி எனும் இடத்திற்கு விஜயம் செய்தனர். முன்னதாக அகத்திய ஆலயத்தை தரிசித்த பின்னர் தாபனத்தின் தலைவர் ஓய்வுநிலைஅதிபர் வேலுப்பிள்ளை தவராசா குழுவினரை வரவேற்றார்.

சித்தர்கள் குரல் அமைப்பின் ஆஸ்தான குரு சிவசங்கர் ஜியின் ஏற்பாட்டில் திங்கட்கிழமை 'அகத்தியர் பெருமானின் ஆயிலிய நட்சத்திர குருபூஜை ஜெயந்தி விழா' கோலாகலமாக நடைபெற்றது.

சித்தர்கள் குரல் அமைப்பின் ஸ்தாபக தலைவர் சிவசங்கர்ஜி , நமசிவாய சுவாமி சிவயோகி மகேஸ்வரன் , சித்தர்கள் குரல் அமைப்பின் தலைவர் ஆதித்தன், உப தலைவர் மனோகரன்,வேதசகா, தியாகராஜா சுவாமி உள்ளிட்ட பல உறுப்பினர்கள் பெரும் யாகத்தில் ஈடுபட்டனர்.

திருகோணமலை கிழக்கு பல்கலைக் கழக சித்தமருத்துவ பீட மாணவர்கள் யாகத்தில் ஈடுபட்டனர். விரிவுரையாளர்களும் கலந்து கொண்டனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து உலகப் புகழ் பெற்ற நாதஸ்வர வித்துவான் பாலமுருகன் , பிரபல தவில் சக்கரவர்த்தி செந்தில் உள்ளிட்ட குழுவினரும் வருகைதந்து சிறப்பித்தனர். தொடர்ந்து அங்கிருந்து ஐந்து கிலோ மீட்டர் காட்டுக்குள்ளால் சென்று அகத்தியர் ஆடி அமாவாசை தீர்த்தமாடிய மகாவலி கங்கை நதி தீரத்தை அடைந்தனர். அங்கு சித்தர்கள் குரல் அமைப்பின் ஸ்தாபக தலைவர் சிவசங்கர் ஜி குழுவினர் மகாவலிகங்கையில் நீராடி, மரகதலிங்கத்திற்கு அபிஷேகம் செய்தனர்.

கங்கைக்கரையில் சிவன் ஆலய பீடம் ஒன்று இருக்கிறது . அங்கு விஷேட யாகமொன்றை சிறப்பாக நடாத்தினர்.

வில்வம் இலைகள் மற்றும் மலர்களால் அர்ச்சனை செய்து பாராயணம் செய்தார்கள். 208 சித்தர்களை வரவழைக்கும் மந்திரம் சிவசங்கர் ஜி யால் ஓதப்பட்டது. முறைப்படி சகல ஆகுதிகளும் இடப்பட்டன. குழுவினருடன் ,பாடசாலை அதிபர் கே.கணேசலிங்கம், சிங்கப்பூர் சித்தர் பக்தரான உஷா உள்ளிட்டோரும் கலந்துகொண்டனர். இறுதியில் அகத்தியர் ஆலயத்தை அடைந்து அகத்தியருக்கு வஸ்திரம் அணிவித்து விசேட பூஜை செய்து வழிபட்டு விடைபெற்றனர்.

## தமக்கு வழங்கப்பட்ட தேர்தல் கடமைகளைகளையும் பொறுப்புக்களையும் சரியாகவும் வினைத்திறனாகவும் நம்பிக்கை பேணும் வகையிலும் மேற்கொள்ள வேண்டும்



தமக்கு வழங்கப்பட்ட தேர்தல் கடமைகளைகளையும் பொறுப்புக்களையும் சரியாகவும் வினைத்திறனாகவும் நம்பிக்கை பேணும் வகையிலும் மேற்கொள்ளுமாறு திருகோணமலை மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலரும் அரசாங்க அதிபருமான பி.எச். என்.ஜயவிக்ரம வேண்டிக்கொண்டார்.

2023 உள்ளூர் அதிகாரசபை தேர்தலில் திருகோணமலை மாவட்டத்தில் வேட்புமனுக்களை கையேற்கும் கடமைகளில் ஈடுபடுத்தப்படவுள்ள உத்தியோகத்தர்களுக்கான நியமனக்கடிதங்கள் வழங்கும் நிகழ்வு இன்று (16) திருமலை மாவட்ட செயலகத்தில் மாவட்ட அரசாங்க அதிபரின் தலைமையில் நடைபெற்றது. எதிர்வரும் 18 ம் திகதி தொடக்கம் 21 ம் திகதி மதியம் 12 மணிவரை வேட்புமனு கையேற்கும் காலமாக அறிவிக்கப்பட்டுள்ளது.அதற்கிணங்க வேட்புமனு ஏற்கும் தேர்தல் கடமைகளில் ஈடுபடவுள்ள உதவி தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கான பயிற்சி செயலமர்வு இன்று நடைபெற்றபோதே மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வேட்பு மனு ஏற்கும் கடமைகள் தொடர்பான விடயங்கள் இதன்போது திருகோணமலை மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளர்(பதில் கடமை) ஆர். சசீலன் அவர்களால் தெளிவுபடுத்தப்பட்டது.

## திருக்கோவில் பிரதேசத்தில் தைப்பொங்கல் பண்டிகைடியையோட்டி பட்டத்திருவிழா

(திருக்கோவில் நிருபர் எஸ்.கார்த்திகேசு)

அம்பாரை திருக்கோவில் பிரதேசத்தில் தைப் பொங்கல் பண்டிகையையொட்டி திருக்கோவில் பிரதேச இளைஞர்களால் பட்டமிடும் திருவிழா மிக சிறப்பாக திருக்கோவில் ஸ்ரீசித்திரவேலாயுத சுவாமி ஆலய கடற்கரையில் இடம்பெற்றன.

இவ் பட்டமிடும் திருவிழாவானது ஆறாவது தடவையாகவும் திருக்கோவில் பிரதேச இளைஞர்களின் ஏற்பாட்டில் நேற்று மாலை இடம்பெற்று இருந்தன.

திருக்கோவில் பிரதேசத்தில் வாழும் சிறுவர்கள் இளைஞர்கள் ஆகியோர் ஒன்றி



னைந்து பிரதேசத்தின் சிறப்பினை வெளிக் கொண்டுவரும் நோக்கில் பட்டங்கள் வடிவமைக்கப்பட்டு பட்டத்திருவிழா இடம்பெற்று இருந்ததுடன் வெற்றி பெறும் பட்டங்களுக்கு பெறுமதியான பரிசில்லும் வழங்கப்படு இருந்தன.

அந்தவகையில் தைப்பொங்கல் பண்டிகையை சிறப்பிக்கும் வகையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை திருக்கோவில் கடற்கரையில் பட்டமிடும் திருவிழா இடம்பெற்று இருந்ததுடன் பெரும் எண்ணிக்கையான பொது மக்கள் தமது குழந்தைகளுடன் மகிழச்சியாக கலந்து கொண்டு இருந்தனர்.

இவ் பட்டத்திருவிழா போட்டியில் முதலாம் இடத்தினை ரொக்கேட் பட்டமும் இரண்டாம் இடத்தினை போதைப் பொருள் பாவவனைக்கு எதிரான விழிப்புணர்வு பட்டத்திற்கும் மூன்றாம் இடம் முப்பரிபாண பட்டத்திற்கும் ஏற்பாட்டாளர்களால் பரிசில்களும் வழங்கப்பட்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பல்சமயங்களாக ஒன்றிணைந்து உழவர்களுக்கும், இயற்கைக்கும் நன்றி செலுத்துவோம் - பல்சமய ஒன்றியத்தின் ஐக்கிய போங்கல் விழா!





'பல்சமயங்களாக ஒன்றிணைந்து உழவர்களுக்கும், இயற்கைக்கும் நன்றி செலுத்துவோம்' - பல்சமய ஒன்றியத்தின் ஐக்கிய பொங்கல் விழா!!

மட்டக்களப்பு மாவட்ட பல்சமய ஒன்றியத்தின் ஐக்கிய பொங்கல் விழா இன்று மட்டக்களப்பில் இடம்பெற்றது.

'பல்சமயங்களாக ஒன்றிணைந்து உழவர்களுக்கும், இயற்கைக்கும் நன்றி செலுத்துவோம்' எனும் தொனிப்பொருளில் மட்டக்களப்பு மாவட்ட பல்சமய ஒன்றியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட பல்சமய ஐக்கிய பொங்கல் விழா புதுமுகத்துவாரம் காயத்திரி பீட வளாகத்தின் இன்று (16) திகதி வெகு விமர்சையாக இடம்பெற்றது.

மட்டக்களப்பு எகெட் கரித்தாஸ் நிறுவனத்தின் இயக்குனர் அருட்தந்தை ஏ.யேசுதாசன் அடிகளார் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பல்சமய ஒன்றியத்தின் செயலாளர் அருட்தந்தை கே.ஜெகதாஸ் அடிகளார், உப தலைவர் மொகமட் சாஜஹான் மௌலவி, பிள்ளையாரடி ஆஞ்சநேயர் அலய பிரதம குரு ஜெகதீஸ்வரக் குருக்கள், அமெரிக்கன் சிலோன் மிசன் குரு முதல்வர் அருட்பணி எம்.லூக்கேயன், ஜெயந்திபுரம் மத்தியஸ்தானத்தின் விகாராதிபதி கட்டஹிரகம தம்மஸ்ரீ, காயத்திரி பீடத்தின் பிரதம குரு சிவஸ்ரீ.பீ.கிறிஸ்ணமூர்த்தி குருக்கள் மற்றும் எகெட் கரித்தாஸ் நிறுவனத்தின் சமாதான செயற்திட்ட இணைப்பாளர் இக்னேசியஸ் கிறிஸ்டி, பல்சமய ஒன்றியத்தின் நிருவாக குழு உறுப்பினர்கள், பிரதேச பல்சமய குழுக்களின் உறுப்பினர்கள், மதத்தலைவர்கள் என பலரும் கலந்து கொண்டு நிகழ்வை சிறப்பித்துள்ளனர்.

பொங்கல் நிகழ்வின் தலைவர் த.குணரெட்ணத்தின் ஒருங்கிணைப்பில் இடம்பெற்ற ஐக்கிய பொங்கல் விழா நிகழ்வில் பல்சமய தலைவர்களாக ஒருங்கிணைந்து பொங்கல் பானைக்கு அரிசி போட்டு, பொங்கல் பொங்கியதுடன், காயத்திரி சித்தர் முருகேசு சுவாமிகள் அறநெறிப்பாடசாலையின் மாணவர்களினால் கலை நிகழ்வுகள் அரங்கேற்றப்பட்டதுடன், பொங்கலின் சிறப்பினை வெளிப்படுத்தும் கலாசார நிகழ்வுகள் மற்றும் அதிதிகள் உரைகள் என்பன இடம்பெற்று, நன்றியுரையுடன் நிகழ்வு நிறைவுபெற்றது.

## அமல மரி தியாகிகளின் சபை முதல்வராக அருட்பணி சே.ஜேயந்தன் பச்சேக் அடிகளார் நியமனம்

( வாஸ் கூஞ்ஞ)



வட மாகாண அமல மரி தியாகிகளின் சபை முதல்வராக அருட்பணி எஸ்.ஜெயந்தன் பச்சேக் அடிகளார் (அ.ம.தி) நியமணம் பெற்றுள்ளார். இவ் மாகாணத்தின் இவ் சபையின் ஒன்பதாவது முதல்வராவார்.

இவர் மன்னார் மாவட்டத்தில் பேசாலையைச் சேர்ந்தவரும். ஓய்வுநிலை அதிபர் திரு. செபஸ்தியாம்பிள்ளை பச்சேக் திருமதி மேரி யுஸ்ரினா பெர்னாண்டோ ஆகியோரின் இரண்டாவது புதலுமாவார்.

அருட்பணி எஸ்.ஜெயந்தன் பச்சேக் அடிகளார் (அ.ம.தி) தனது ஆரம்பக் கல்வியை பேசாலை புனித மேரிஸ் பாடசாலையில் இரண்டாம் வகுப்பு வரை கற்றபின் உயர்தர வகுப்பு வரை பேசாலை சென் பற்றிமா மகா வித்தியாலயத்தில் கற்றவராவார்.

1989 ஆம் ஆண்டு யாழ் கொழும்புத்துறை அமல மரி தியாகி சபையின் சிறிய குருமடத்தில் இணைந்து கொண்ட இவர் பின் தனது மெய்யியல் கல்வியை கொழும்புத்துறை புனித சவேரியார் குருத்துவக் கல்லூடயில் கற்றபின் பண்டாரவைளயில் தனது நவசந்தியாச வாழ்வில் ஈடுபட்டார்.

இதை; தொடர்ந்து 1996 ஆம் ஆண்டு முதல் மூன்று வருடங்கள் உரோமபுரியிலுள்ள கிறகோரியன் பல்கலைக்கழகத்தில் இறையியல் கற்றபின் 1999 ஆம் ஆண்டு உரோமாபுரியில் தியாக்கோனாக அபிஷேகம் பண்ணப்பட்டார்.

பின் 12.01.2000 ஆம் ஆண்டு அமரர் மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இராயப்பு யோசேப்பு ஆண்டகையினால் அருட்பணியாளராக அபிஷேகம் செய்யப்பட்டார்.

இதன் பின்னர் கொழும்புத்துறையில் அமல மரி தியாகி இல்லத்தில் மாணவர்களின் உருவாக்க்த்ணீல் தன்னை அர்ப்பணித்திருந்தார்.

பின் 2002 விருந்து 2004 வரைக்கும் உரோபுரி கிறகோரியன் பல்கலைக்கழகத்தில் உயர்படிப்பில் ஈடுபட்டார்.. 2004 லிருந்து 2009 வரை வவுனியா தேசிய கல்வியல் கல்லூடயில் விரிவுரையாளராக செயல்பட்டுக் கொண்டு இருந்த காலத்தில் வவுனியா வைத்தியசாலையில் நோயாளர்களுக்கு ஒரு ஆன்மீகக் குருவாக தனது நேரங்களை செலவழித்து வந்தார்.

2009 ஆம் ஆண்டிலிருந்து 2014 ஆம் ஆண்டு வரை கொழும்புத்துறை புனித சவேரியார் குருத்துவக் கல்லூடயில் விரிவுரையாளராகவும் அத்துடன் கோப்பாய் கல்வியல் கல்லூரியில் கற்பித்தவராகவும் திகழ்ந்து வந்தார்.

இதைத் தொடர்ந்து 2014 ஆம் ஆண்டிலிருந்து 2022 ஆம் ஆண்டு வரை நோர்வே நாட்டில் தமிழ் மக்களுக்கு அங்கு ஒரு ஆன்மீக குருவாக தனது அருட்பணி வாழ்வை மேற்கொண்டு வந்ததுடன்

பின் நாடு திரும்பியதும் சொற்ப மாதங்களாக மன்னார் அமல மரி தியாகிகளின் ஞானோதயத்தின் இயக்குனராக இருந்து வந்த இந்த வேளையிலேயே அருட்பணி செ.ஜெயந்தன் பச்சேக் அடிகளார் வட மாகாண அமலி மரி தியாகிகளின் சபையின் முதல்வராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அடிகளார் எல்லா மக்களுடனும் அன்பாகவும் பண்பாகவும் பழகி வருபவர் மாத்திரமல்ல எப்பொழுதும் இன்முகத்துடனே காணப்படும் ஒரு சுபாவம் கொண்டவராக திகழ்பவர் எனப் போற்றப்படுபவர் என்பதும் குறிப்பிடத்தக்கது..

## மக்கள் காங்கிரஸ் திருகோணமலை மாவட்டத்தில் ஐந்து உள்ளூராட்சிமன்றங்களை இம் முறை ஆட்சி செய்யும்

**(ஹஸ்பர்)**

மக்கள் காங்கிரஸ் திருகோணமலை மாவட்டத்தில் ஐந்து உள்ளூராட்சிமன்றங்களை இம் முறை ஆட்சி செய்யும் என அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தேசிய அமைப்பாளரும் முன்னால் பிரதியமைச்சருமான அப்துல்லா மஹ்ரூப் தெரிவித்தார்.

உள்ளூராட்சிமன்ற தேர்தல் தொடர்பில் திருகோணமலை இறக்கக்கண்டி பகுதியில் (15)இடம் பெற்ற மக்கள் சந்திப்பின் பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்



போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்தும் தெரிவிக்கையில் இம் முறை கிண்ணியா நகர பிரதேச சபை,மூதூர் பிரதேச சபை,தம்பலகாமம் குச்சவெளி பிரதேச சபைகளை மக்கள் காங்கிரஸ் அமோக வாக்குகளை பெற்று ஆட்சி செய்யும் .இந்த 13 உள்ளூராட்சி மன்ற சபைகளிலும் தனித்துவமாக மயில் சின்னத்தில் எமது கட்சி போட்டியிட்டு றிசாட் பதியுதீனின் கைகளை பலப்படுத்தி மூவின மக்களின் நம்பிக்கைகளை பெற்ற ஒரு தலைமைத்துவமாக திகழப்படும் என்றார்.

# கல்முனை மாநகரில் மாபெரும் பொங்கல் விழா



































**(பாறுக் ஷிஹான்)**

அம்பாறை மாவட்டத்தின் பிரதான தைப்பொங்கல் திருவிழா 2022 கல்முனை தமிழ் இளைஞர் சேனை அமைப்பின் ஏற்பாட்டில் கல்முனை பழைய பஸ் நிலையத்தில் இளைஞர் சேனை அமைப்பின் தலைவர் எம்.சங்கீத் தலைமையில் கல்முனை வடக்கு பிரதேச செயலக அனுசரனையுடன் கோலாகலமாக நடைபெற்றது.

நேற்று ஆரம்பமான இந்நிகழ்வில் இலங்கையின் தேசியக் கொடி, தமிழ் இளைஞர் சேனை அமைப்பின் கொடி, நந்திக்கொடி ,என்பன அதிதிகளால் ஏற்றப்பட்டு நிகழ்வுகள் ஆரம்பமாகின.

இதன் போது அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் ஜெ.எம்.ஏ.டக்ளஸ் பிரதம அதிதியாக கலந்து கொண்டு பொங்கல் பானையில் புத்தரிசி இட்டு பொங்கல் விழாவை ஆரம்பித்து வைத்தார். மேலும் கௌரவ அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக மாவட்ட அரசாங்க அதிபர் வே . ஜெகதீசன் , கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் ரீ.ஜே . அதிசயராஜ், கலந்து கொண்டதுடன் விசேட அதிதிகளாக கல்முனை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எம்.எல்.புத்திக்க, கல்முனை தலைமையக பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ரம்சீன் பக்கீர் , வைத்தியர் புஷ்பலதா லோகநாதன் ,அம்பாறை மாவட்ட கலாச்சார உத்தியோகத்தர் கே.ஜெயராஜ், கல்முனை வடக்கு கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் வை.வசந்தி, உட்பட பலர் கலந்து கொண்டனர்.

குறித்த நிகழ்வில் அதிதிகளை வரவேற்றல், கொடி ஏற்றல் , தேசிய கீதம் இசைத்தல் , சேனையின் கீதம் இசைத்தல் , மங்கல விளக்கேற்றல், இறை வணக்கம், தமிழ்த் தாய் வாழ்த்து , ஆசியுரை ,வரவேற்புரை , வரவேற்பு நடனம் ,தலைமையுரை, பொங்கல்பானை ஏற்றல், நடனம், விஷேட அதிதிகள் உரை, நடனம் ,அதிதிகள் உரை ,நடனம் ,பிரதம அதிதி உரை , நன்றியுரை, என இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.மேலும் தமிழர் பாரம்பரிய கலாசாரத்தை பிரதிபலிக்கும் மங்கள வாத்தியங்கள் இசைக்கப்பட்டதுடன் கல்முனை உவெஸ்லி உயர்தர மாணவர்களின் நடனம் விழாவிற்கு அழகு சேர்த்திருந்தது.

மாவட்ட அரசாங்க அதிபர் ஜெ.எம்.ஏ.டக்ளஸ் அங்கு உரையாற்றும் போது இந்து மக்கள் மாத்திரமல்லாது மாவட்டத்தின் அனைத்து மக்களும் ஒன்றிணைந்து கொண்டாடும் விழாவாக தைப்பொங்கல் விழா காணப்படுகின்றது. மதங்கள் இனங்கள் வேறாக இருந்தாலும் நாட்டை கட்டியெழுப்ப நாம் எல்லோரும் ஒரே மக்களாக செயற்பட வேண்டும். அம்பாறை மாவட்டத்தில் பிறந்து வளர்ந்த என்னை பிரதம அதிதியாக அழைத்து இப்படியான ஒரு கௌரவத்தை வழங்கிய இன்றைய நாளை என்னால் மறக்க முடியாது. இதனை ஏற்பாடு செய்த அனைவருக்கும் நன்றிகள் என்றார்.

அத்துடன் அம்பாறை மாவட்டத்தின் அரசாங்க அதிபருக்கு தமிழ் இளைஞர்கள் பொன்னாடை போர்த்தி மாலைகள் அணிவித்து மகத்தான வரவேற்பு வழங்கினர்.

வருடா வருடம் கல்முனை பிரதான நகரம் தைப்பொங்கல் தினத்தன்று அலங்கரிக்கப்பட்டு தமிழர்களின் பாரம்பரிய கலாசார பண்பாட்டு விழுமியங்களை வெளிப்படுத்தும் வகையில் நிகழ்ச்சிகள் நடைபெறுவதுண்டு. மாட்டு வண்டிகள் ஊர்வலமாக சென்று தைப்பொங்கல் திருவிழா இளைஞர்களால் கொண்டாடப்பட்டு வருவது வழமையாகும் என்பதுடன் கடந்த ஆண்டும் இளைஞர் சேனை அமைப்பினரால் பொங்கல் விழா மிகச்சிறப்பாக நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.